




கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு, தொண்டு நிறுவனர்கள் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு பணிகள் குறித்து ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (14.10.2016) நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ. இளங்கோ உடனுள்ளார்.

செ.வெ.எண்: 722/2016 நாள்: 14.10.2016

பத்திரிக்கை செய்தி

**NGO's CO-ORDINATION MEETING - 14.10.2016**

வடகிழக்கு பருவமழை 2016 முன்னிட்டு மாவட்ட ஆட்சியர் தலைமையில் நாஞ்சில் கூட்ட அரங்கத்தில் வைத்து தன்னார்வ தொண்டு நிறுவனர்களுக்கு வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை தொடர்பான தொண்டு நிறுவன ஒருங்கிணைப்பு கூட்டம் இன்று மாலை 5 மணிக்கு நடைபெற்றது. இக்கூட்டத்தில் 30 தொண்டு நிறவனத்தினர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் அவசர காலங்களில் தொண்டு நிறுவனங்களின் ஒருங்கிணைப்பின் முக்கியத்துவம், வடகிழக்கு பருவ மழையின் போது உயிரிழப்பு ஏற்படாமல் இருக்க போதிய விழிப்புணர்வு மக்கள் மத்தியில் ஏற்படுத்துவது மற்றும் மாவட்டத்தில் ஏற்கேனவே கண்டறியப்பட்ட தாழ்வான பகுதிகளில் கூடுதல் கவனம் செலுத்த அறிவுறுத்தப்பட்டது. மாவட்ட நிர்வாக தரப்பில் ஏற்கனவே பாதுகாப்பான தங்குமிடம் கண்டறியப்பட்டு தேவையான உணவு பொருட்கள், அரிசி, பருப்பு, மண்ணெண்ணெய், போன்றபொருட்கள் நியாய விலை கடைகளில் தயார் நிலையில் இருப்பில் உள்ளது என தெரிவிக்கப்பட்டது. மேலும் மாவட்ட அவசர கட்டுப்பாட்டு மையத்தின் தொடர்பு எண் 1077 யை பஞ்சாயத்து அலுவலகம், கிராம அலுவலகம் உட்பட அரசு அலுவலகங்களில் விளம்பர படுத்தவும் தெரிவிக்கப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு வட்டத்தில் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளை சேர்ந்த நீர் நிலை மூலம் பாதிப்புகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே தன்னார்வ தொண்டு நிறுவன்த்தினரின் பணி மிக முக்கியமாக உள்ளது என மாவட்ட ஆட்சியர் அவர்கள் கூறினார்கள்.

மாவட்ட அளவில் தொண்டு நிறுவனங்களுக்கு என ***வாட்ஸ்அப்*** குழு அமைத்து அவசரகாலங்களில் தகவல் பறிமார ஏற்படுத்த வேண்டும் எனவும் தொண்டு நிறுவனத்தினர்க்கு மாவட்ட அளவில் பேரிடர் குறித்த பயிற்சி வழங்குதல், முன்று மாதத்திற்கு ஒரு முறை இக்கூட்டம் நடை பெற வேண்டும் எனவும் தொண்டு நிறுவனங்கள் சார்பாக மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு கோரிக்கை வைக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இளங்கோ, கோட்ட வருவாய் அலுவலர் இராஜ்குமார், வட்டாட்சியர்கள் திரு. மூர்த்தி, ஆறுமுகநாயனார், மாவட்ட பேரிடர் மேலாண்மை குழு உறுப்பினர்கள் திரு. சுரேஷ் குமார், திரு. அருள் கண்ணன், மாவட்ட திட்ட அலுவலர்(CBDRM) திரு.டேவிட்சன், நேரு யுவகேந்திரா மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. தினேஷ், ரெட்கிராஸ் அமைப்பாளர் தலைவர் ஜெஸி ரோச்,மாவட்ட கவுன்சிலர் விஜிலா மற்றும் தொண்டு நிறுவன பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.